https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842

19-2 April 2025

# தற்காலக் கவிதையில் அறிவியலின் எதிர்காலக் கற்பனை

**முனைவர் வே. லீலாவதி**
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்
ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி
குரோம்பேட்டை, சென்னை – 44

## ஆய்வுச் சுருக்கம்

*அறிவியலானது சங்க இலக்கியத்தில் தொடங்கி இன்றைய புதுக்கவிதை வரை பரவி நிற்கின்றது. அறிவியல் என்பது ஏன், எதனால், எப்படி இயங்குகின்றது என்ற அறிவியல் அடிப்படையில் அறிவது ஆகும். அறிவின் அடுத்தடுத்த படிநிலை தான் அறிவியல். அறிவியலில் அறிவுக்கு மட்டும் தான் இடமுண்டு. அறிவின் மூலமாக மொழி விரிவடைவது கலை என்றும், கண்டுபிடிப்புகளின் வழியாக விரிவடைவது அறிவியல் என்றும் அறிவியலாளர்கள் கூறுகின்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் 'அறிவியல்' என்னும் சொல்லாக்கம் பரவலாகப் பேசப்பட்டு, தொன்று தொட்டு, அறிவின் மொழியாக, அறிவையலின் மொழியாகவே அறிவியலானது திகழ்கிறது. தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் இயற்கை சார்ந்த அறிவியல் பொதிந்து கிடக்கின்றன. பழந்தமிழ் இலக்கியமான சங்க இலக்கியத்தில் இயற்கையோடு சார்ந்த வாழ்வியல் அறிவியல் அதிகமாகக் காணப்படுகின்றன. பக்தி இலக்கியத்திலும் காப்பியங்களிலும் அண்டத்தில் தொடங்கி கோள்களின் இயக்கம் வரை பேசப்படுகின்றன. தற்கால இலக்கியமான புதுக்கவிதையில் அறிவியலின் எதிகாலம் பற்றிய கவிதைகள் அதிகமாக இடம்பெற்றுள்ளது. இவற்றை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.*

## திறவுச் சொற்கள்

*கட்டிலடங்காக் கவிதை - பரிணாம வளர்ச்சி - திகிரி - அறிவியலாளர்கள் - விண்வெளிப் பயணம் - மெய்ஞானம் - அல்லிவட்டம் - முகநூல் - டுவிட்டர் - ரோஃபோ.*

## முன்னுரை

*இன்றைக்கு மாறிவரும் வாழ்க்கைக்கு அடித்தளமாய் அமைவது அறிவியல் ஆகும். நாளுக்கு நாள் அறிவியலானது அதிகரித்து வருவதால், அதன் தாக்கம் மனித வாழ்வின் ஊனாகவும் உயிராகவும் விளங்குகின்றது. தமிழ் இலக்கியத்தில் புதுக்கவிதையின் வளர்ச்சியானது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியத்திலும் இடம்பெற்ற அறிவியல் செய்திகளை விட மிகுதியாக காணப்படுகின்றன. அறிவியலால் எதிர்காலத்தில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்படும் என்பதைப் புதுக்கவிதையின் வாயிலாக இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.*

## புதுக்கவிதை

*கவிதையானது முதலில் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஒன்று மரபுக்கவிதை. மற்றொன்று புதுக்கவிதை. கவிதையானது இன்று ஹைக்கூ, சென்ட்ரியூ, லிமரைக் எனப் பல்வேறு பெயர்களில் புதிதாக வந்துகொண்டிருக்கிறது. மரபுக்கவிதையானது இலக்கண முறைப்படி அதாவது, யாப்பின் உறுப்பான எழுத்து, அசை, தளை, சீர், அடி, தொடை, பா, பாவினம்*

**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

எல்லாம் சரியான முறையில் அமைந்திருக்க வேண்டும். ஆனால் புதுக்கவிதையானது இலக்கண மரபை மீறி சொல்ல முடிந்ததை சுதந்திரமாகவும், எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் இருந்தது.

புதுக்கவிதையானது முதலில் யாப்பு வடிவத் தினைத் தவிர்த்த வசன கவிதை எனப் பெயர் பெற்றது. அதற்குப் பின்னர் யாப்பில்லாக் கவிதை, இலகுக் கவிதை, கட்டிலடங்காக் கவிதை, விடுநிலைக் கவிதை எனப் பல பெயர்களில் அமையப்பெற்று இறுதியாக புதுக்கவிதை என்ற பெயர் நிலைபெற்றது. புதுக்கவிதையைப் புதுமரபாகக் கருதும் சி. சு. செல்லப்பா,

**"புதுக்கவிதை எதிர்காலப் பழங்கவிதையின் இயல்பும் சிறப்பும் அறிந்து மரபை மீறி மரபு அமைக்கும் வழியாகக் கவிதை படைத்தவர் கையாளும் வழி வகைகளைப் பொருத்து இருக்கிறது"[1]**

என்று குறிப்பிடுகிறார். இன்றைய புதுக்கவிதை யின் தோற்றத்திற்கும் மறுமலர்ச்சிக்கும் வித்திட்டவர் பாரதி. வால்ட் விட்மின் எழுதிய புல்லின் இதழ்கள் கவிதையைப் பார்த்து அவரும் எழுதத் தொடங்கினார். ஆகையால் தான் பாரதியை புதுக்கவிதை யின் முன்னோடி என்று அழைத்தனர். புதுக்கவிதையின் வளர்ச்சியானது இயற்கை யில் தொடங்கி இன்று அறிவியல் வரை பரவிக்கிடக்கின்றன.

## அறிவியல் – விளக்கம்

'அறிவியல்' என்ற சொல் தொடக்க காலத்தில் கற்பதால் பெறும் அறிவு 'Knowledge acquired by study' என்ற பொருளில் கையாளப்பட்டு வந்தது. இன்றைக்கு மாறி வரும் வாழ்க்கைக்கும் வளர்ச்சிக்கும் அடித்தளாமாய் இருப்பது அறிவியல் ஆகும். ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி முதன்முதலாக 'Scientist' என்ற சொல் பயன்படுத்தப்பட்ட இடத்தைக் குறிக்கின்றது. அறிவியல் பெரும்பாலும் நம்பிக்கையை வைத்து முன்னேறுகின்றது. அந்த நம்பிக்கை என்னவெனில்,

**"உயிர்ப்பொருளாகட்டும் அல்லது இந்த முழு அண்டமாகட்டும் எங்கு ஓர் ஒற்றுமைப் பாங்கு அல்லது ஒழுக்கமைப்பு உள்ளது; அந்த ஒற்றுமையையும் அந்த ஒழுங்கமைப்பையும் மனிதனால் அறிந்து கொள்ள முடியும்."[2]**

என்பது தான் என்கிறார். இந்த நம்பிக்கை அடிப்படையில் அறிவியல் வந்ததால், அந்த வளர்ச்சியின் போக்கு ஒரு குறியீட்டை நோக்கி நடைபோடுவதாக இருந்து வந்திருக்கி ன்றது. இன்றும் நடைபோட்டுக் கொண்டிரு க்கிறது. அறிவியல் என்பதற்குச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி, வாழ்வியல் களஞ்சியம் போன்றவையும் அறிவியலுக்கு விளக்கம் தந்துள்ளது.

## அறிவியல் வளர்ச்சி

ஆதிகாலத்தில் இருந்தே இந்த உலகம் கடவுளால் படைக்கப்பட்டதாகவும், பூமியில் இருக்கின்ற அனைத்து உயிர்களும் கடவுளால் தான் உருவாக்கப்பட்டது என்ற நம்பிக்கையை மறுத்து இயற்கை மற்றும் ஏனைய பொருட்களின் தோற்றத்திலுள்ள அறிவியலை இந்த உலகிற்கு எடுத்துரைத்த வர்கள் அறிவியலாளர்களே. தொன்மையான இலக்கண நூலில் தொல்காப்பியர் உலகத்தில் வாழும் பல்லுயிர்களை,

**"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே**
**இரண்டறி வதுவே அதனொடு நாவே**
**மூன்றறி வதுவே அவற்றோடு மூக்கே**
**நான்கறி வதுவே அவற்றோடு கண்ணே**
**ஐந்தறி வதுவே அவற்றோடு செவியே**
**ஆறறிவதுவே அவற்றோடு மனனே."[3]**

அவற்றின் பண்புகள் கொண்டு பாகுபடுத்தி யுள்ளார். உயிர்களின் பரிணாம வளர்ச்சியை யும், அறிவினால் விளங்கும் இயல்பினை அறிவியல் நோக்கோடு தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இயற்கை உலக உயிர் களின் உயிர்நாடி என்பதை,

**"ஞாயிறு போற்றும் ஞாயிறு போற்றும்**
**காவேரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு**
**மேரு வலந்தரி தலான்.."[4]**

என்ற பாடலடியில் இளங்கோவடிகள் சூரிய ஒளியினால் தான் தாவரங்கள் ஆற்றலைப் பெறுகின்றன என்கிற அறிவியல் செய்தியை உணார்த்தியுள்ளார். மேலும் ஔவையார், 'அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்' என்ற அடியில் அணுவைப் பற்றிக் கூறியுள்ளார். அணு என்பது கண்ணுக்குப் புலப்படாத சிறிய மூலக்கூறு. இதனை பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே அறிந்திருந்தது வியப்புக்குரியது. அறிவியல் வளர்ச்சி என்பது, மனிதகுலம் இயற்கையை அறிந்துகொள்வதற்கும், அதன்

மூலம் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும், புதிய கண்டுபிடிப்புகளையும், தொழில்நுட்பங் களையும் உருவாக்கும் ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும். இலக்கியத்தில் அறிவியல் வளர்ச்சியானது முதலில் உயிரில் தொடங்கி அறிவியலின் எதிர்காலக் கற்பனை வரை வளர்ச்சி பெற்றுள்ளது.

## அறிவியலின் எதிர்காலக் கற்பனை

அறிவியலின் வளர்ச்சியினால் பலவகை மாற்றம் ஏற்படும் என்பதையும், வருங்கால அறிவியல் மனிதனுக்கு வழங்கப் போகின்ற நன்மை மற்றும் தீமை எவ்வாறு ஏற்படும் என்பதையும், புதிய அறிவியலால் மாறும் புது யுகம் எவ்வாறெல்லாம் நடக்கிறது என்பதையும் பல கவிஞர்கள் காட்டியுள்ள னர்.

நிலவில் போய் தாய்மார்கள் குழந்தைக்குச் சோறு ஊட்டலாம் மற்றும் ஆலயத்தில் உள்ள நவகிரகத்தை ஆகாயத்தில் சுற்றலாம் என்கிறதை,

"நிலாச்சோறு ஊட்டிய தாய்மார்கள்
நாளை…
நிலவினுள் சோறாக்கி ஊட்டலாம்!
சூரிய ஒளியால் ஓடும் வாகனங்கள் நாளை..
சூரியனில் ஓடலாம்!
நவகிரகத்தில் சுற்றலாம்!
ஆலயத்தில் அல்ல ஆகாயத்தில்"[5]

எனத் தன் கவிதையில் அறிவியலின் வளர்ச்சியைக் காட்டியுள்ளார். பெண்கள் அறிவியலின் வளர்ச்சியினால் எவ்வாறெல் லாம் இருப்பார்கள் என்பதைக் காட்டும் கவிதை இதோ,

"கோள்களைப் புள்ளியாக்கி வானவில்லை
வளைத்து
வண்ணக் கோலமிடலாம்.
வாசலில் அல்ல வானத்தில்.!
சமையலறைப் பொரியலில்
பொறியியல் தொழில் நுட்பமிருக்கலாம்!
தட்டு முட்டு சாமான் தேய்ப்பவர்கள்
பறக்கும் தட்டுகளில் பவனி வரலாம்!"[6]

என்ற கவிதையில் பெண்கள் வானத்தில் சென்று கோலமிடலாம் எனவும், பாத்திரம் தேய்ப்பவர்கள் பறக்கும் தட்டில் பவனி வரலாம் எனவும் பதிவு செய்துள்ளார். அறிவியல் வளர்ச்சியடைந்ததைக் காண்பிக் கும் மற்றொரு கவிதை இதோ,

"ஆலயங்களுக்குள் ஆய்வுக்
கூடங்களிருக்கலாம்!
விஞ்ஞானம் மெய்ஞ்ஞானமாகும் வரை…
மூலக்கூறுகளால் மூலவரை வணங்கலாம்…
இயற்பியல் இறைவனுக்கு காந்தங்களைச்
சூடமாக்கலாம்!
அல்லிவட்ட இதழ்களால் புல்லிவட்டப்
பூக்களால்
தாவரவியல் தெய்வத்தைத் தரிசிக்கலாம்."[7]

எனத் தன் கவிதை வரியில் அறிவியல் உட்கூறுகள் எதிர்காலத்தில் தெய்வத்தை எப்படியெல்லாம் தரிசிக்கும் என்பதைக் காண்பித்துள்ளார்.

"விஞ்ஞானிகளே!
சூரியன் தான் சுட்டெரிக்கும் சக்தியில்
ஆற்றலுடையவன் என்று
சும்மா கூடச் சொல்லி விடாதீர்கள்
ஏனெனில் காலம் இவர்கள் இதயத்தில்
ஏற்படுத்திய வெம்மையில் கதிரவன்
கைவைத்தால் கூட காணாமல் போய்
விடுவான்."[8]

என்று தன் கவிதையில் விஞ்ஞானிகளே சூரியன் சுட்டெரிக்கும் சக்தி உடையது என்று கூறிவிடாதீர்கள், இன்றையக் காலக் கட்டத்தில் சூரியனே வெல்லக்கூடிய மனித ஆற்றல் அறிவுடையது என்றும், அறிவியலில் சிறந்துவிளங்குகின்றான் என்றும் தெளிவாகக் கூறிச் சென்றுள்ளார்.

"ஆராரோ ஆரிராரோ கண்ணே என்
கண்மணியே
கலியுகத்தில் அவதரித்த
கம்ப்யூட்டர் நீதானே (ஆராரோ)
ட்விட்டராய் சிரிக்கின்ற சிறுகுருவி நீதானே
உன்முகத்தை படமெடுப்பேன்
ஃபேஸ்புக்கில் ஏற்றிடுவேன் (ஆராரோ)
இன்டர்நெட்டாய் என்வாழ்வில்
இணைந்துவிட்ட பைங்கிளியே
மடிதவழும் லேப்டாப்பே
மாணிக்கமே கண்ணுறங்கு"[9]

என்ற கவிதை வரிகளில் பெண்களின் தாலாட்டு எதிர்காலத்தில் இப்படி இருக்க லாம் எனவும், இன்றைய காலத்தில் அறிவிய லின் வளர்ச்சி சிறப்பிக்கப்பட்டு வருவதை யும் காண்பித்துள்ளார்.

"தபால் தலை, தபால் காரன்.
தபால் பெட்டி தம்பட்டம் அடித்தால்
பாட்டி கேட்டிருந்தனர் 'மின்னஞ்சல்
பேரனும்'
'முகநூல் பேத்தியும்' "வேகச் சேவைக்கு என்
தந்தி"
என்று பாட்டி சொன்னது தான் தாமதம்
உருண்டு புரண்டு சிரித்தனர் பேரனும்
பேத்தியும்"[10]

என்ற கவிதையைப் படிக்கும் போது தந்தி சேவை நிறுத்தப்பட்டது தெரியாமல் பாட்டி சொன்னதைக் கேட்டு போனும், பேத்தியும் சிரித்தது இன்றைய காலத்தில் குழந்தைகள் எப்படி அறிவியலில் சிறப்பு பெற்று இருக்கின்றனர் என்பதனைக் காண்பித்துள்ளார்.

"நேருக்கு நேராய்ச் சந்திக்கலாம்
மனிதர் சொன்னது அறிவிப்பு.
கோடியில் குவிந்தனர்
வாடிக்கையாளர் பணம்
கட்டித் திடல் வந்து
தமிழ் இலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகள்
வணக்கம் சொல்லித் திணறி கூச்சம் பழகி நின்றார்
சில வினாடிகள் மீண்டும் ஓடி ஒளிந்தனர்
முகநூல், ட்விட்டர் போன்ற பழமைகளும்
இன்னும் சில புதுமைகளும்
இயக்கிய தங்கள் மாயா உலகில்
'நேருக்கு நேர்' நாகரிகப் புதுமை ஆனது. அது..."[11]

என்ற கவிதையில் வருங்காலத்தில் நாகரிகம் மாற்றம் மற்றும் அறிவியல் துறையில் எண்ணற்ற கண்டுபிடிப்புகள் மூலமாக நாகரிகம் முழுமையாக மாற்றமடைய அறிவியல் துறையே முழுக் காரணமாக இருக்கும் என்ற செய்தி தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

"எழுதப் படிக்க எல்லாத்துக்கும் மிஜிணு வந்தாச்சு
எலக்ட்ரானிக் மிஜிணு வந்தாச்சு
பள்ளிக்கூடம் போகக்கூட ராக்கெட் வந்தாச்சு
பறக்கும் ராக்கெட் வந்தாச்சு
பாடப்புத்தகம் சுமக்கக்கூட ரோஃபோ வந்தாச்சு
கம்ப்யூட்டர் ரோபோ வந்தாச்சு"[12]

என்ற கவிதையில் எதிர்காலத்தில் எப்படியெல்லாம் அறிவியல் வளர்ச்சி பெற்றிருக்கும் என்பதை அழகாகக் காட்டியுள்ளது.

## முடிவுரை

இக்கட்டுரையானது அறிவியல் எதிர்காலத்தில் எவ்வாறான மாற்றங்கள் கொண்டு வரும் என்பதை எடுத்துரைக்கிறது. அறிவியல் செய்திகள் தொல்காப்பியத்தில் தொடங்கி தற்கால இலக்கியம் வரை பரவி நிற்கின்றது. அறிவியலின் எதிகாலக் கற்பனையானது, எதிர்காலத்தில் இயந்திரங்களின் பயன்பாடு மிகுதியாக இருக்கும் என்பதையும், மனித வாழ்க்கையை மனிதன் வாழாமல் இயந்திரங்கள் வாழ்கின்ற நிலை உருவாகலாம் என்பதையும் புதுக்கவிதைக் காட்சிப்படுத்திருக்கின்றது. எதிர்கால அறிவியலால் எதுவும் சாதியமாகலாம் என்பதைப் புதுக்கவிஞர்கள் விஞ்ஞானத்தால் உலகைக் காப்போம்; விஞ்ஞானத்திடமிருந்து உலகைக் காப்போம் என்பதை எடுத்துக் காட்டியுள்ளனர்.

## சான்றெண் விளக்கம்

1. சி.சு. செல்லப்பா, தமிழில் இலக்கிய விமர்சனம், ப.170
2. ப.க. பொன்னுசாமி, வளரும் அறிவியல் வாழும் இலக்கியம், ப.120
3. தொல்காபியம்,பொருளதிகாரம், மரபியல் நூ. 571
4. சிலப்பதிகாரம், புகார் காண்டம், மங்கல வாழ்த்து காதை, பா.அ. 3-5
5. நெல்லை பி. சுப்பையா, கனவுகளைச் சாதிக்கலாம், ப. 42
6. மேலது, பக். 64-65
7. மேலது, ப. 97
8. பொதிகைத்தமிழரசனின் கவிதைகள், ப.36
9. ரத்னமாலா புரூஸ், காய்ந்த மண் ஈரமாகிறது, பக். 59-60
10. புதுயுகன், கதவு இல்லாத கருவூலம், ப. 36
11. மேலது, ப. 50
12. யோமா சேகர், சிவப்புச் சீதனம், ப. 42

## துணை நூற்பட்டியல்


1. முனைவர் க. முருகேசன், தமிழ்ப்புதுக் கவிதைகளில் அறிவியல், சாரதா பதிப்பகம்,திருவல்லிக்கேணி, முதற்பதிப்பு, 2007.
2. முனைவர் ச.வே.சுப்ரமணியன், தொல் காப்பியம் முழுவதும் விளக்கவுரை, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2008.
3. சிலப்பதிகாரம், புலியூர்க் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம், சென்னை, பதிப்பு 2018.
4. பி. சுப்பையா, கனவுகளைச் சாதிக்கலாம், திருமலை கண்ணன் பதிப்பகம், திருநெல்வேலி, முதற்பதிப்பு, 2008.
5. ரத்னமாலா புரூஸ், காய்ந்த மண் ஈரமாகிறது, ரத்னமாலா புரூஸ் வெளியீடு, நாகர்கோவில், முதற்பதிப்பு, 2015.
6. புதுயுகன், கதவு இல்லாத கருவூலம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2013.
7. யோமா சேகர், சிவப்புச் சீதனம், முரண்களரி படைப்பக வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, 2013.